FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348071

1. District : திருவண்ணாமலை PS: அரசு.க.மரியா Year: 2025 FIR No.: 14/nc/2025 Date: 31.07.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: உணவுப் பாதுகாப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: திருத்தப்பட்டது 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 30.07.2025 Date to : 30.07.2025
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் காலை 11.00மணி நாள் வரை மாலை 15.00மணி
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 31.07.2025 Time : 11.00மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: மேலூர் 50 கி.மீ தொலைவு
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : அனந்தநம்பூரை அட்டாட்சியர் அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி திருவண்ணாமலை மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G.வெங்கடாசலம் (b) Father's/ Husband's Name : M.கோவிந்தன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 30/1/2025 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தனியார் தொழில் நிறுவனத்தின் Manufacturing officer (g) Address : 1/2-4, கோட்டாம்பட்டி கிராமம். சந்தைப்பட்டி அஞ்சல்
முகவரி திருப் பட்டம், திருமலை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு.ஜெயகணேஷ், இளநிலை உதவியாளர், அட்டாட்சியர் அலுவலகம்
அனந்தநம்பூரை பட்டம், திருவண்ணாமலை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை


9. Particulars of properties stolen / involved (Attach separate sheet If necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / Involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : -
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

31/07/25

31/07/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

31.07.2025 at 14.20 hrs

Name: பெயர் S.ரமேஷ்.....
Rank: நிலை .....No. எண் .....
காவல் உதவி ஆய்வாளர்
உதவி காவல் ஆய்வாளர்
திருவல்லிக்கேணி

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 14/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

இன்று 31.07.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், சந்தப்பட்ட அஞ்சல், கோட்ரப்பட்டி கிராமத்தை சேர்ந்த கோவிந்தன் மகன் G.வெங்கடாசலம் என்பவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து கணினியில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், G. வெங்கடாசலம், வயது 30, த/பெ. M.கோவிந்தன், 1/24, கோட்ரப்பட்டி கிராமம், சந்தப்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம். நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் டிப்ளமோ படித்து முடித்துவிட்டு ஓசூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் Manufacturing Officer ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது அத்தை திருமதி.V.லட்சுமி என்பவரை சந்தப்பட்டியை சேர்ந்த திரு.வெங்கடேசன் என்பவருக்கு திருமணம் செய்துகொடுத்தோம். எனது அத்தை லட்சுமிக்கு கடந்த 13.10.2005-ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், அனுமந்தீர்த்தத்தில் உள்ள அரசு HSC-ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அப்போது அந்த குழந்தைக்கான பிறப்பு சான்றினை நாங்கள் வாங்கவில்லை. அந்த குழந்தைக்கு ஆதார் கார்டு எடுப்பதற்கான விவரங்கள் கொடுக்கும் போது, அவரது பெயர் பிரியதர்ஷினி என்றும், மேலும் பிறந்த தேதி 22.04.2007 என்று தவறுதலாக எனது அத்தை கொடுத்துவிட்டார். பிரியதர்ஷினியின் ஆதார் கார்டில் உள்ள பிறந்த தேதியை மாற்றுவதற்காக இ-சேவை மையத்திற்கு சென்று விவரம் கேட்ட போது, பிறந்த தேதியை மாற்றவேண்டுமானால், அதற்கு ஆதாரமாக பிறப்பு சான்றிதழ் வேண்டும் என்று சொன்னார்கள். எனது அத்தை லட்சுமியிடம் பிறப்பு சான்றிதழ் கேட்டதற்கு, அவர் பிறப்பு சான்றிதழ் வாங்கவில்லை என்று தெரிவித்தார். அதனால் நான் எனக்கு தெரிந்த சில நபரிடம் விசாரித்தபோது, பிறப்பு சான்றிதல் வாங்கவில்லை என்றால் அது

ஊத்தங்கரை சார்-பதிவாளர் அலுவலகத்தில் குழந்தையின் பெயர் இல்லாமல் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று தெரிவித்தனர். அதனால் நான் ஊத்தங்கரை சார்-பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து, பிரியதர்ஷினியின் அசல் பிறப்பு சான்றிதழை கடந்த 24.07.2025-ம் தேதி பெற்றேன். அந்த பிறப்பு சான்றிதழில் பெயர் இல்லாமல் இருந்தது. ஆகையால், அந்த பிறப்பு சான்றிதழில் பெயர் சேர்க்க வேண்டி எனது அத்தையும் நானும் ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள ஒரு ஜெராக்ஸ் கடைக்கு 25.07.2025-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சென்று பிறப்பு சான்றிதழில் பெயர் சேர்த்து கொடுக்கும் படி மனு தட்டச்சு செய்து அதில் எனது அத்தை திருமதி.லட்சுமியிடம் கையொப்பம் வாங்கியும், அந்த மனுவினை ஆன்லைனில் பதிவுசெய்வதற்காக அந்த ஜெராக்ஸ் கடையிலேயே ரூ.200/-ஐ கட்டணமாக செலுத்தி, அதற்கான இ-சலான் நகல் பெற்றேன். மேற்படி, மனுவுடன் எனது மாமா வெங்கடேசன், அத்தை லட்சுமி மற்றும் பிரியதர்ஷினி ஆகியோரின் ஆதார் நகல்கள் மற்றும் ஆன்லைனில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இ-சலான் ஆகியவற்றை இணைத்தேன். பின்பு அந்த கடையில் எனக்கு தட்டச்சு செய்து கொடுத்தவரிடம் இந்த மனுவை யாரிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு, அவர் தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் ஜெய்கணேஷ் என்பவரை சென்று பார்க்கும்படி கூறினார். நானும் சென்று தாலுக்கா அலுவலகத்தில் இருந்த திரு.ஜெய்கணேசை பார்த்து எனது அத்தை பெயரில் உள்ள விண்ணப்பத்தினை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி பார்த்துவிட்டு, இந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் பணம் கொஞ்சம் செலவாகும் என்றும், திங்கள் கிழமைக்குமேல் வந்து பார்க்குமாறு கூறிவிட்டார். பிறகு நான் கிளம்பி வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது அலுவலகத்தில் இரவு பணி என்பதால் என்னால் திங்கள் கிழமை சென்று அவரை சந்திக்கமுடியவில்லை. பிறகு நான் 30.07.2025-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஊத்தங்கரை தாலுகா ஆபிசுக்கு சென்று திரு.ஜெய்கணேஷ் அவர்களை சந்தித்து எனது அத்தை பெயரில் உள்ள விண்ணப்பத்தை கொடுத்து, பிறப்பு சான்றிதழில் எனது அத்தை மகளின் பெயரை சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தேன். அதற்கு அவர் விண்ணப்பத்தை பரிசீலனை செய்ய வேண்டும் என்றால் ரூ.4,500/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று கூறினேன். அவர் மீண்டும் ரூ.4,000/- கொடு என்று கேட்டார். அதற்கு நான் எனது

அத்தையை அழைத்துக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். மீண்டும் மதியம் சுமார் 3.00 மணிக்கு நான் எனது அத்தையை அழைத்துக்கொண்டு ஊத்தங்கரை தாலுகா ஆபிஸ்க்கு சென்று திரு.ஜெய்கணேசை சந்தித்தோம். அப்போது எனது அத்தை திரு.ஜெய்கணேஷிடம் பிறப்பு சான்றிதழில் அவரது மகளின் பெயரை சேர்த்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்போது அவர் நான் ஏற்கனவே ரூ.4,000/- செலவாகும் என்று சொல்லிவிட்டேன் என்று ஜெய்கணேஷ் தெரிவித்தார். அதற்கு எனது அத்தையும் நானும் அவ்வளவு பணம் எங்களால் கொடுக்க முடியாது என்று கெஞ்சி கேட்டதற்கு அவர் ரூ.500/- குறைத்து கொண்டு ரூ.3,500/- கொடுத்தால் தான் நான் பிறப்பு சான்றிதழில் பெயர் சேர்த்து தர ஏற்பாடு செய்வேன் என்று கராராக சொல்லிவிட்டார். என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,500/- கொடுத்து எனது அத்தை மகள் பிரியதர்ஷினியின் பிறப்பு சான்றிதழில் பெயர் சேர்க்கும் வேலையை செய்ய எனக்கு விருப்பமில்லை. அதனால் அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,500/-த்துடன் ஊத்தங்கரை தாலுக்கா ஆபிசில் வேலைசெய்யும் ஜெய்கணேசை சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட ஜெய்கணேஷ் என்பவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) G.வெங்கடாசலம் 31.07.2025.

Sir, a computer typed complaint has been received by me on 31.07.2025 at 11.00 hrs. Further a confidential verification on the general reputation of the accused Tr.Jaiganesh has been made and learnt to be not good. The motive and antecedents of the complainant have been checked carefully and found nothing adverse. Therefore, a case in Krishnagiri V&AC Cr.No.14/AC/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC Amendment Act, 2018 was registered today on 31.07.2025 at 12.15 hrs against the accused Tr.Jaiganesh, Junior Assistant, Taluk Office, Uthangarai. The original FIR along with this complaint was sent to the Hon'ble Court of Principal District/Session Judge, Krishnagiri and remaining copies were sent to the officers concerned.

31/07/2025
Inspector of Police
Vigilance Anti Corruption
Krishnagiri Unit.